பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
23. 11 .2024 **SATURDAY** 7. 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மஹாராஷ்ட்ரா மற்றும் ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன.

2. சர்வதேச அரங்கில் இந்தியாவின் முக்கியத்துவத்தை உலகம் தற்போது ஒப்புக்கொண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. மணிப்பூர் மாநிலத்தில் தற்போது நிலவும் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து அம்மாநில பாதுகாப்பு ஆலோசகர் திரு. குல்தீப் சிங் ராணுவம் மற்றும் துணை ராணுவப் படையினருடன் ஆலோசனை நடத்தினார்.

4. ரஷ்யாவின் தாக்குதலை அடுத்து, நேட்டோ அமைப்பும் யுக்ரைனும் பிரஸ்செல்ஸில் அவசரக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளன.

5. ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பஞ்சாப் அணி – ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியையும், மோகன் பஹான் அணி - ஜாம்செட்பூர் அணியையும் எதிர்கொள்கின்றன.

>>>>><<<<<

மஹாராஷ்ட்ரா மற்றும் ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் கடந்த 13 மற்றும் 20ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது.

மஹாராஷ்ட்ராவில் கடந்த 20ஆம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடந்து முடிந்தது.

வாக்கு எண்ணிக்கையை முன்னிட்டு, அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

சுற்று வாரியாக முடிவுகளை வெளியிடவும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த இரு மாநிலங்களின் தேர்தலுடன் இடைத்தேர்தல் நடைபெற்ற வயநாடு உள்ளிட்ட இரண்டு மக்களவை தொகுதி, உத்தரபிரதேசத்தில் 9 சட்டப்பேரவை தொகுதிகள் உள்ளிட்ட 48 சட்டப்பேரவை தொகுதிகளில் பதிவான வாக்குகளும் இன்று எண்ணப்படுகின்றன.

>>>>><<<<<

மஹாராஷ்ட்ரா மற்றும் ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகள், இன்று எண்ணப்படவுள்ள நிலையில், பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா நேற்று புதுதில்லியில் கட்சியின் மூத்த தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் பிஜேபியின் பொதுச்செயலாளர்கள் திரு. பி.எல். சந்தோஷ், திரு. வினோத் தாவ்டே, திரு. அருண்சிங், திரு. துஷ்வந்த் கௌதம், இரு மாநிலங்களின் பிஜேபி தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், மஹாராஷ்ட்ரா மற்றும் ஜார்க்கண்ட் மாநிலத்தில் சட்டப்பேவை தேர்தல் வாக்கு எண்ணிக்கையை ஒட்டி மேலிடப் பார்வையாளர்களை காங்கிரஸ் நியமித்துள்ளது.

கட்சியின் மூத்த தலைவர்கள் திரு. அஷோக் கெலாட், திரு. பூபேஷ் பாஹெல் மற்றும் திரு. பரமேஸ்வரா ஆகியோர் மஹாராஷ்ட்ரா மாநிலத்திற்கும், திரு. தாரிக் அன்வர் மற்றும் இரண்டு மூத்த தலைவர்கள் ஜார்க்கண்ட் மாநிலத்திற்கும் மேலிடப் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

கடந்த பத்தாண்டுகளாக தமது அரசு செயல்படுத்தி வரும் சீர்திருத்தம், செயல்திறன் மற்றும் மாற்றம் என்ற தாரக மந்திரத்தின் காரணமாக, இந்தியாவின் முக்கியத்துவத்தை உலகம் தற்போது ஒப்புக்கொண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜெர்மனியின் **Stuttgart**-ல் உள்ள ஊடக குழுமத்தின் நிகழ்ச்சியில் நேற்று காணொலி வாயிலாக உரையாற்றிய அவர், உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரமாக இந்தியா உள்ளதால், ஒவ்வொரு நாடும் இந்தியாவுடன் இந்த வளர்ச்சியில் இணைய விரும்புவதாக கூறினார்.

இந்தியாவில் கவனம் செலுத்துங்கள் என்ற ஜெர்மனியின் ஆவணம் அதற்கு ஒரு சிறந்த சான்று என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலகில் இந்தியா மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளக்கூடிய வகையில் அந்த ஆவணம் திகழ்வதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

ஒவ்வொருதுறைக்கும் இந்தியா புதிய கொள்கைகளை அறிமுகப்படுத்தி, 21ஆம் நூற்றாண்டில் விரைவான வளர்ச்சியை எட்ட தன்னை தயார்படுத்திக் கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் வணிகம் செய்வதை எளிதாக்கும் வகையில் தமது அரசு சில கட்டுப்பாடுகளை முடிவுக்கு கொண்டு வந்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

வளர்ச்சித் திட்டங்களுக்கு எளிதாக முதலீடுகள் கிடைக்கும் வகையில், வங்கித் துறையை இந்தியா வலுப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டுவதற்கு, வலுவான அடித்தளமிடப்பட்டுள்ளது என்றும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

கடந்த சில ஆண்டுகளாக இந்தியா – ஜெர்மனி இடையே பரஸ்பர ஒத்துழைப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், இந்தியாவில் தற்போது ஆயிரத்து 800க்கும் அதிகமான ஜெர்மன் நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாகவும், இவை கடந்த 3 முதல் 4 ஆண்டுகளில் 15 பில்லியன் டாலருக்கும் அதிகமாக முதலீடு செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் 34 பில்லியன் டாலரை எட்டியுள்ளது என்றும் வரும் ஆண்டுகளில் இது மேலும் வளர்ச்சியடையும் என்றும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மூன்று நாடுகள் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றிரவு புதுதில்லி திரும்பினார்.

நைஜீரியா, பிரேஸில், கயானா ஆகிய நாடுகளில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பிரதமருக்கு கயானா மற்றும் டொமினிக்கா குடியரசின் உயரிய விருது வழங்கப்பட்டது.

>>>>><<<<<

தமிழகத்தின் நிதி நெருக்கடி மற்றும் மாநில உரிமைகள் குறித்து நாடாளுமன்றத்தில் திமுக உறுப்பினர்கள் குரல் எழுப்ப வேண்டும் என்று திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர், மத்திய அரசின் திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாடு நிதியை திமுக உறுப்பினர்கள் முழுமையாக பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

தமிழகத்தில் 2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் திமுக வெற்றிபெற நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழுமையாக பங்களிக்க வேண்டும் என்றும் திரு. மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

>>>>><<<<<

மணிப்பூர் மாநிலத்தில் தற்போது நிலவும் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து அம்மாநில பாதுகாப்பு ஆலோசகர் திரு. குல்தீப் சிங் ராணுவம் மற்றும் துணை ராணுவப் படையினருடன் ஆலோசனை நடத்தினார்.

இம்பாலில் நேற்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், ராணுவம், எல்லைப் பாதுகாப்புப் படை, மத்திய ரிசர்வ் காவல்படை, அஸ்ஸாம் ரைஃபில்ஸ் மற்றும் காவல்துறை உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பேசிய திரு. குல்தீப் சிங், மாநிலத்திற்கு மத்திய ரிசர்வ் காவல்படையின் 90 கம்பெனிகள் கூடுதலாக வந்துள்ளதாகவும், விரைவில் 70 கம்பெனி படைகள் வரவுள்ளதாகவும் கூறினார்.

ஏற்கனவே வந்த மத்திய ரிசர்வ் காவல்படையில் 70 கம்பெனிகள் பல்வேறு பகுதிகளில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க அறிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் கடுமையாக பின்பற்றப்படும் என்றும் அவர் கூறினார்.

வன்முறை நிகழ்ந்த பகுதிகளில் அமைதியையும், மக்களின் இயல்பு வாழ்க்கையையும் மீட்டெடுக்க மாநில அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் திரு. குல்தீப் சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

இந்திய ராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி, நேபாளத்தில் அந்நாட்டு பிரதமர் திரு. கே.பி. சர்மா ஒலி மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. மன்பீர்ராய் ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

காத்மண்டுவில் நேற்று நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, இந்தியா – நேபாளம் இடையேயான தனித்துவமிக்க மற்றும் நெருக்கமான இருதரப்பு ஒத்துழைப்பின் பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதித்தார்,

இந்த சந்திப்பின் போது, நேபாள பிரதமரின் தலைமை ஆலோசகர் திரு. பிஷ்ணு ரிமா, நேபாளத்திற்கான இந்திய தூதர் திரு. நவீன் ஸ்ரீவஸ்தவா, வெளியுறவு அமைச்சக இணைச் செயலாளர் திரு. பிரிகு துங்கனா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஐந்து நாள் பயணமாக நேபாளம் சென்றுள்ள ஜெனரல் உபேந்திர திவேதி, பாதுகாப்புத் துறையில் அந்நாட்டுடன் இந்தியா ஒத்துழைத்து செயல்படுவது தொடர்பாக அந்நாட்டு ராணுவ உயரதிகாரிகளுடன் விவாதிக்கவுள்ளார்.

>>>>><<<<<

தெலங்கானா மாநிலத்தில் **BRS** கட்சியிலிருந்து விலகி, காங்கிரஸ் கட்சியில் இணைந்த 3 சட்டமன்ற உறுப்பினர்களை பதவிநீக்கம் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை அம்மாநில உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

பிஜேபி மற்றும் **BRS** கட்சிகளின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அந்த மனுக்களை விசாரித்த தலைமை நீதிபதி **Alok Aradhe,** நீதிபதி சீனிவாசராவ் ஆகியோர் அடங்கிய முதன்மை அமர்வு, தகுதிநீக்கம் செய்யக்கோரும் மனுக்கள் மீது, சட்டப்பேரவை தலைவர் முடிவெடுக்க பரிந்துரைத்து உத்தரவிட்டது.

இந்த விஷயத்தில் சட்டப்பேரவைத் தலைவர் எடுக்கும் முடிவே இறுதியானது என்றும் உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

**>>>>><<<<<**

யுக்ரைனின் ஒரு நகரத்தின் மீது அதிநவீன ஏவுகணைகளை கொண்டு ரஷ்யா தாக்குதல் நடத்தியதை அடுத்து, அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து நேட் டோ அமைப்பும் யுக்ரைனும் அவசரக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளன.

பிரஸ்செல்ஸில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் நேட்டோ அமைப்பின் பிரதிநிதிகளும், யுக்ரைன் வெளியுறவு மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் கலந்து கொள்கின்றனர்.

ரஷ்ய தாக்குதலை அடுத்து, யுக்ரைன் நாடாளுமன்றக் கூட்டம் நேற்று ரத்து செய்யப்பட்டது.

அமெரிக்கா வழங்கிய நீண்ட தூர ஏவுகணைகளை கொண்டு, ரஷ்யாவின் மீது யுக்ரைன் தாக்குதல் நடத்தியதால், நேற்று, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளைக் கொண்டு ரஷ்யா யுக்ரைனின் **Dnipro** –நகரில் உள்ள ராணுவ வளாகத்தை தாக்கியது.

முன்னதாக, தொலைக்காட்சியில் உரையாற்றிய அந்நாட்டு அதிபர் திரு. விளாடிமிர் புட்டின், மேற்கத்திய நாடுகளுக்கு கடும் எச்சரிக்கை விடுத்தார்.

ரஷ்யாவை தீவிரமாக தாக்கக்கூடிய அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் நீண்டதூர ஏவுகணைகளை யுக்ரைன் பயன்படுத்தியதாக அவர் குற்றம் சாட்டினார்.

இதற்கு பதிலடியாக, ரஷ்யா, யுக்ரைன் மீது அதிநவீன ஏவுகணைகளை கொண்டு தாக்குதல் நடத்தியதாக திரு. புட்டின் தெரிவித்தார்.

>>>>><<<<<

கோவாவில் நடைபெறும் ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் பஞ்சாப் அணி – ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள மற்றொரு ஆட்டத்தில் மோகன் பஹான் அணி - ஜாம்செட்பூர் அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை இன்று பங்கேற்கிறது.

சீனாவின் **Shenzhen-**ல் நடைபெறும் இப்போட்டியில் இந்த இணை தென்கொரியாவின் **Jin Yong – Seo Seung** இணையை எதிர்கொள்கிறது.

>>>>>END<<<<<